பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**30 01 2026** **7 15**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** புதிய தொழில்நுட்பங்களை தேசத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** இந்திய - அரபு நாடுகள் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறவுள்ளது.

**3.** உரத்துறையில் கனடாவுடனான ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஜேபி நட்டா தெரிவித்துள்ளார்.

**4.** நாட்டின் டிஜிட்டல்மயமாக்க நடவடிக்கைகளில் பாரத் நெட் திட்டம் முக்கிய பங்காற்றுவதாக மத்திய தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

**5.** மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

புதிய தொழில்நுட்பங்களை தேசத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று அவர், செயற்கை நுண்ணறிவுத் துறையில் செயல்படும் தலைமைச் செயல் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

அடுத்த மாதம் இந்தியாவில் நடைபெற உள்ள செயற்கை நுண்ணறிவு தொடர்பான மாநாடு இத்துறை சார்ந்த நிறுவனங்களுக்கு அதிக வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்று அவர் கூறினார்.

**UPI** பணப்பரிவர்த்தனை மூலம் இந்தியா தனது திறனை நிரூபித்துள்ளதாகவும், இதேபோல் செயற்கை நுண்ணறிவிலும் இந்தியாவின் திறனை நிரூபிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தியாவின் டிஜிட்டல் கட்டமைப்பின் மீது உலகம் மிகப்பெரிய நம்பிக்கை வைத்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தொழில்நுட்பம் அனைவரையும் சென்றடைவது, தரவுப் பாதுகாப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

வெளிப்படையான மற்றும் பாதுகாப்பான செயற்கை நுண்ணறிவு சூழலை நோக்கி பயணிக்க வேண்டியது அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவை நெறிமுறைகள் சார்ந்து பயன்படுத்த வேண்டும் என்றும், இதில் எந்தவிதமான சமரசமும் கூடாது என்றும் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

<<<<>>>>

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற படைகள் பாசறை திரும்பும் நிகழ்வு தேசத்தின் வலிமையை எடுத்துக்காட்டுவதாக இருந்தது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஆபரேஷன் சிந்தூர், வந்தேமாதரம் பாடலின் 150 ஆண்டுகள் ஆகியவற்றின் சித்தரிப்பு நேர்த்தியாக இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

மத்திய ஆயுதக் காவல்படையினரின் இசை சிறப்பாக இருந்தது என்றும், உற்சாகத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது என்றும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

இந்திய - அரபு நாடுகள் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறவுள்ளது.

**10** ஆண்டுகளுக்குப் பிறகு இக்கூட்டம் நடைபெற உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில் கல்வி, எரிசக்தி, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து விரிவாக விவாதிக்கப்படும் என்று அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

இதில் பல்வேறு அரபு நாடுகளைச் சேர்ந்த வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் அந்நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்க உள்ளனர்.

<<<<>>>>

உரத்துறையில் கனடாவுடனான ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஜேபி நட்டா தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள கனடா இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு. **Tim Hodgosn** புதுதில்லியில் நேற்று திரு. ஜெ.பி. நட்டாவை சந்தித்துப் பேசினார்.

நாட்டின் பொட்டாஷ் தேவையைப் பூர்த்தி செய்ய பெருமளவு உரம் கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதாக திரு. நட்டா தெரிவித்தார்.

வேளாண் மற்றும் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்த இந்தியாவும் - கனடாவும் இணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

இத்துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதன் மூலம் இரு நாடுகளும் பயனடைய முடியும் என்று திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

கனடா அமைச்சர், மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயலையும் நேற்று சந்தித்துப் பேசினார்.

முக்கிய கனிமங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து கனடா அமைச்சருடன் ஆலோசனை நடத்தியதாக சமூக வலைதளத்தில் திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் டிஜிட்டல்மயமாக்க நடவடிக்கைகளில் பாரத் நெட் திட்டம் முக்கிய பங்காற்றுவதாக மத்திய தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்துப் பேசிய அவர், பாரத்நெட் திட்டத்தின் இரண்டு கட்டங்களின்கீழ் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு அகண்ட அலைவரிசை இணைப்பு வழங்கப்பட்டள்ளதாக கூறினார்.

நாட்டில் 7 லட்சம் கிலோ மீட்டர் தொலைவுக்கு கண்ணாடி இழை கேபிள்கள் பதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது மின் ஆளுகை, டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை, தொலைமருத்துவம் உள்ளிட்டவற்றை வலுப்படுத்தியுள்ளதாக திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறினார்.

<<<<>>>>

நாட்டில் பிரதமரின் இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டத்தின்கீழ் இதுவரை 10 கோடியே 43 லட்சம் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், தமிழகத்தில் இத்திட்டத்தின்கீழ் 41 லட்சத்து 50 ஆயிரம் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் திரு. செர்ஜியோ கோர் புதுதில்லியில் நேற்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்துப் பேசினார்.

இருதரப்பு உறவை வலுப்படுத்துவது குறித்து இந்த சந்திப்பில் ஆலோசனை நடத்தப்பட்டதாக சமூக வலைதளத்தில் திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

மின் பற்றாக்குறையில் இருந்து மின்மிகை என்ற நிலைக்கு நாடு முன்னேறி இருப்பதாக மத்திய மின்துறை இணையமைச்சர் திரு. ஸ்ரீபத்நாயக் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், நாட்டின் மின் உற்பத்தி திறன் தற்போது 513 ஜிகாவாட்டாக உள்ளது என்றார்.

2014ஆம் ஆண்டுக்குப் பின்னர் 11 ஆண்டுகளில் 289 ஜிகாவாட் மின் உற்பத்தி திறன் கூடுதலாக எட்டப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

2032ஆம் ஆண்டுக்குள் இது 874 ஜிகாவாட்டாக அதிகரிக்கும் என்று திரு. ஸ்ரீபத்நாயக் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டின் விண்வெளிப் பொருளாதாரம் 8 புள்ளி 4 பில்லியன் டாலர் அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளதாக மத்திய விண்வெளித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்துப் பேசிய அவர், விண்வெளித்துறையில் தற்போது நாட்டில் 399 புத்தொழில் நிறுவனங்கள் செயல்படுவதாக கூறினார்.

இத்துறையில் தனியார்துறை பங்கேற்புக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது மிகப்பெரிய வாய்ப்புகளை உருவாக்கும் என்று அவர் கூறினார்.

இஸ்ரோ இதுவரை 434 வெளிநாட்டு செயற்கைக்கோள்களை செலுத்தியுள்ளதாகவும், இதில் 399 செயற்கைக்கோள்கள் 2014ஆம் ஆண்டுக்குப் பின்னர் செலுத்தப்பட்டவை என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் 323 மில்லியன் யூரோ மற்றும் 233 மில்லியன் டாலர் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அடுத்த 10 ஆண்டுகளில் நாட்டின் விண்வெளிப் பொருளாதாரம் 45 பில்லியன் டாலரை எட்டும் என்று திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

ஒடிசா முதலமைச்சர் திரு. மோகன் சரண் மஜி புவனேஸ்வரில் நேற்று உலக வங்கி தலைவர் திரு. அஜய் பங்காவுடன் ஆலோசனை நடத்தினார்.

குறு சிறு நடுத்தர நிறுவனங்களின் மேம்பாடு, வேளாண் வளர்ச்சி, சுற்றுலா வளர்ச்சி உள்ளிட்டவை குறித்து திரு. அஜய் பங்காவுடன் ஆலோசனை நடத்தப்பட்டதாக திரு. மோகன் சரண் மஜி கூறியுள்ளார்.

<<<<>>>>

சத்தீஸ்கடில் பாதுகாப்புப் படையினருடன் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் நக்சலைட்டுகள் இருவர் கொல்லப்பட்டனர்.

பிஜப்பூர் அருகே இந்த மோதல் நடைபெற்றதாக பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர்களை பிடிக்க உதவுபவர்களுக்கு 7 லட்சம் ரூபாய் சன்மானம் அறிவிக்கப்பட்டிருந்ததாக காவல்துறையினர் கூறினர்.

<<<<>>>>

யுக்ரைனில் நிலவும் கடும் குளிரைக் கருத்தில் கொண்டு அந்நாட்டின் மீதான தாக்குதல்களை தற்காலிகமாக நிறுத்தி வைக்க ரஷ்ய அதிபர் திரு விளாதிமிர் புடின் ஒப்புக் கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வாஷிங்டனில் பேசிய அவர், தாம் தனிப்பட்ட முறையில் திரு புடினைத் தொடர்புகொண்டு பேசியபோது இது தொடர்பாக வேண்டுகோள் விடுத்ததாக தெரிவித்தார்.

அதை திரு புடின் ஏற்றுக் கொண்டதாக திரு டிரம்ப் தெரிவித்தார்.

இதனிடையே யுக்ரைனில் தெற்கு சபோரிஜியா பகுதியில் ரஷ்யா நடத்திய டிரோன் தாக்குதலில் மூன்று பேர் கொல்லப்பட்டதாக யுக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

தில்லி, பஞ்சாப், ஹரியானா, சண்டிகட் மற்றும் உத்தரப்பிரதேசத்தின் பல இடங்களில் கடும் பனிமூட்டம் தொடர்ந்து நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஹரியானா, பஞ்சாப், பிஹார், சத்தீஸ்கட் உள்ளிட்ட மாநிலங்களின் பல பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்கு கடும் குளிர் நிலவும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது,

உத்தராகண்ட் மற்றும் மத்தியப்பிரதேசத்தின் சில இடங்களில் உறைபனி நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

வதோதராவில் நேற்று நடைபெற்ற போட்டியில் பெங்களூரு அணி உத்தரப்பிரதேச அணியை எதிர்கொண்டது.

இதில் முதலில் விளையாடிய உத்தரப்பிரதேச அணி நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவலில் **8** விக்கெட் இழப்புக்கு **143** ரன் எடுத்தது.

**144** ரன் என்ற வெற்றி இலக்குடன் பின்னர் களமிறங்கிய பெங்களூரு அணி **13** புள்ளி **3** ஓவரில் **2** விக்கெட் இழப்புக்கு **147** ரன் எடுத்து வெற்றி பெற்றது.

பெங்களூரு அணி இந்த வெற்றியின் மூலம் **12** புள்ளிகளைப் பெற்று நேரடியாக இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

-------------

பஹ்ரைனில் நடைபெற்று வரும் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் **N.S. Balaji** - ஆஸ்திரியாவின் **Oberleitner** இணை -

நெதர்லாந்தின் **Sander Arends** - மொனாக்கோவின் **Romain Arneodo** இணையை இன்று எதிர்கொள்கிறது.

---------------

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் தருண் மணப்பள்ளி - சீனாவின் **Xuan Chen Zhu**-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

-------------

ஹைதராபாதில் நடைபெற்று வரும் தேசிய சீனியர் மகளிர் கபடிப் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் தமிழக அணி - சண்டிகர் அணியை வென்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<The End>>>>**